DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 192/2024 |
| Deposition of Witness for | : | P.W. 3 |
| Name | : | **அமுதா** |
| Husband Name | : | கிருஸ்ணன் |
| Village | : | ஆலம்பக்கோட்டை |
| Taluk | : | தேவகோட்டை |
| Calling | : | குடும்ப தலைவி |
| Age | : | 45/2025 |

**(வழக்கின் 1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 மற்றும் 3 எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 26.03.2025

**முதல் விசாரணை:**

நான் தற்போது ஆலம்பகோட்டையில் வேலை செய்து வருகிறேன். நான் அரசின் 100 நாள் வேலை திட்டத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 துரைபாண்டி., அ.சா.2 இந்து மதி ஆகியோரை தெரியும். எனது வீட்டின் பக்கத்து வீட்டுகாரர் ஆவார். எதிரிகள் அனைவரையும் தெரியும். எதிரிகளும் எனது பக்கத்து வீட்டுகாரர் ஆவார். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு இரவு 08.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தேன். அப்போது எனது விட்டிற்கு வெளியே துரைபாண்டி , எதிரி அர்சுணன் ஆகியோரின் சத்தம் கேட்டு நான் வந்து பார்த்தேன். இருவரும் மல்லு கட்டி சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள் நானும் மற்றவர்களும் அவர்களை பிரித்துவிட்டோம். அ.சா.1 துரைபாண்டி., அ.சா.2 இந்து மதி ஆகியோருக்கு காயங்கள் எவ்வாறு ஏற்பட்டது என்று நான் பார்க்கவில்லை. அ.சா.2 க்கு கையிலும் அ.சா.1. முதுகிலும் காயங்கள் ஏற்பட்டிருந்தது. போலிசார் என்னை மறுநாள் விசாரித்தார்கள். வழக்கு சம்பந்தமாக

எனக்கு எதுவும் தெரியாது.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது 13.08.2021ம் தேதி இரவு 08.45 மணியளவில் துரைபாண்டி மற்றும் இந்து மதி ஆகியோரின் சத்தம் கேட்டு நான் வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தபோது எதிரி அர்சுணன் அ.சா.1 அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அவரது வலது கை தோள்பட்டையில்வெட்டி காயப்படுத்தினார் என்றும் அவரது மனைவி இந்து மதியை அருவாளல் வலது கையில்வெட்டி காயப்படுத்தினார் என்றுன் எதிரி அஸ்வினி அருவாளல் துரைபாண்டியை இடது கை பின்புறம் வெட்டி காயப்படுத்தினார் என்றும் 3 வது எதிரி துரைபாண்டியை கட்டையால் இடுப்பில் அடித்து காயப்படுத்தினார் என்றும் ஆயுதங்களை காட்டி கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் எதிரிகள் எனது பக்கத்துவீட்டுகாரர் மற்றும் உறவினர் என்பதால் அவர்களை வழக்கில் இருந்து காப்பாற்ற வழக்கு சம்பவத்தை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறு்க்குவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் எதிராளி முன்பாக சாட்சியம் சொல்லப்பட்டு என் கண்காணிப்பின் கீழ், அவைகளை அப்படியே தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சரியாக இருப்பதாக சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

A PASUMPON SHANMUGAIAH
Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.03.26 21:57:41 +0000

தலைமைக் குற்றவியல் நடுவர்,

சிவகங்கை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 192/2024 |
| Deposition of Witness for | : | P.W. 4 |
| Name | : | **கிருஸ்ணன்** |
| Father's Name | : | கருப்பையா |
| Village | : | ஆலம்பக்கோட்டை |
| Taluk | : | தேவகோட்டை |
| Calling | : | சமையல் வேலை |
| Age | : | 59/2025 |

**(வழக்கின் 1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 மற்றும் 3 எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 26.03.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது ஆலம்பகோட்டையில் வேலை செய்து வருகிறேன். நான் சமையல் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 துரைபாண்டி,. அ.சா.2 இந்து மதி ஆகியோரை தெரியும். அ.சா.3 அமுதா எனது மனைவி எனது வீட்டின் பக்கத்து வீட்டுகாரர் ஆவார். எதிரிகள் அனைவரையும் தெரியும். எதிரிகளும் எனது பக்கத்து வீட்டுகாரர் ஆவார். கடந்த 13.08.2021 தேதி இரவு 08.00 மணியளவில் நானும் எனதுமனைவியும் வீட்டில் இருந்தேன். அப்போது எனது விட்டிற்கு வெளியே துரைபாண்டி , எதிரி அர்சுணன் ஆகியோரின் சத்தம் கேட்டு நான் வந்து பார்த்தேன். இருவரும் மல்லு கட்டி சண்டை போ'டுக்கொண்டிருந்தார்கள் நானும் மற்றவர்களும் அவர்களை பிரித்துவிட்டோம். அ.சா.1 துரைபாண்டி,. அ.சா.2 இந்து மதி ஆகியோருக்கு காயங்கள் எவ்வாறு ஏற்பட்டது என்று நான் பார்க்கவில்லை. அ.சா.2 க்கு கையிலும் அ.சா.1. முதுகிலும் காயங்கள் ஏற்பட்டிருந்தது. போலிசார் என்னை மறுநாள்

விசாரித்தார்கள். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது 13.08.2021ம் தேதி இரவு 08.45 மணியளவில் துரைபாண்டி மற்றும் இந்து மதி ஆகியோரின் சத்தம் கேட்டு நான் வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தபோது எதிரி அர்சுணன் அ.சா.1 அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அவரது வலது கை தோள்பட்டையில்வெட்டி காயப்படுத்தினார் என்றும் அவரது மனைவி இந்து மதியை அருவாளல் வலது கையில்வெட்டி காயப்படுத்தினார் என்றுன் எதிரி அஸ்வினி அருவாளல் துரைபாண்டியை இடது கை பின்புறம் வெட்டி காயப்படுத்தினார் என்றும் 3 வது எதிரி துரைபாண்டியை கட்டையால் இடுப்பில் அடித்து காயப்படுத்தினார் என்றும் ஆயுதங்களை காட்டி கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் எதிரிகள் எனது பக்கத்துவீட்டுகாரர் மற்றும் உறவினர் என்பதால் அவர்களை வழக்கில் இருந்து காப்பாற்ற வழக்கு சம்பவத்தை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறு்க்குவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் எதிராளி முன்பாக சாட்சியம் சொல்லப்பட்டு என் கண்காணிப்பின் கீழ், அவைகளை அப்படியே தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சரியாக இருப்பதாக சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமைக் குற்றவியல் நடுவர்,
சிவகங்கை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 192/2024 |
| Deposition of Witness for | : | P.W. 5 |
| Name | : | **மீனு** |
| Husband Name | : | பஞ்சவர்ணம் |
| Village | : | ஆலம்பக்கோட்டை |
| Taluk | : | தேவகோட்டை |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 60/2025 |

**(வழக்கின் 1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 மற்றும் 3 எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 26.03.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது ஆலம்பகோட்டையில் வேலை செய்து வருகிறேன். நான் சமையல் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 துரைபாண்டி,, அ.சா.2 இந்து மதி ஆகியோரை தெரியும். கடந்த 13.08.2021ம் தேதி நான் எனது வீட்டில் இருந்தேன் . அப்போது எனதுவீட்டுக்கு வரும் வழியில் வந்த எதிரி அர்சுணனை பார்த்து இந்து மதி ஏன் இந்த வழியாக வருகிறாய் என்று கேட்டார். இந்து மதி கேட்டவுடனே எதிரி அருவாளர் அவரது வலது கையில் ஓ்ங்கி வெட்டிவிட்டார். நான் உடனே ஓடி போய் இந்து மதியை கட்டிபிடித்து அவரது காயத்தின் துணியை வைத்து கட்டினேன். அதன் பிறகு துரைபாண்டி அர்சுணனவுடன் சண்டை போட்டார். அப்போது எதிரி அர்சுணன் வைத்திருந்த அருவாளை எதிரி அஸ்வினி வாங்கி துரைபாண்டி'யின் தோள்பட்டையில் வெட்டினார். எதிரி தாரணி கட்டையால் துரைபாண்டியை முதுகில் அடித்தார். கிருஸ்ணன் மற்றும் அமுதா ஆகியோர் சண்டையை விலக்கி விட்டார்கள்.

திருவேகம்பத்தூர் போலிசார் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்தார்கள் நான் துரைபாண்டியையும் இந்துமதியையும் சிவகங்கை அரசு மருத்துவமனைக் அழைத்து சென்றேன். போலிசார் என்னை அன்றை தினமும் மறுநாளும் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறு்க்குவிசாரணை**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் கால அவகாசம் கோரப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் எதிராளி முன்பாக சாட்சியம் சொல்லப்பட்டு என் கண்காணிப்பின் கீழ், அவைகளை அப்படியே தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சரியாக இருப்பதாக சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமைக் குற்றவியல் நடுவர்,
சிவகங்கை.